# கலைஞரும் நானும்

## 99

**என் சிறுவயதில் இருந்து, என் பெயராகவே என்னுடன் பயணிக்கும் தலைவர் குறித்து, ஆய்வு செய்வதற்கு என் மாணவர்கள் பலரையும் ஊக்குவிக்கிறேன். அது அவரை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணியாகப் பார்க்கிறேன் என, தனது நினைவுகளைப் பகிர்கிறார் முனைவர் பேராசிரியர் சொற்கோ இரா.கருணாநிதி.**



# “என்னுடனே பயணிக்கும் தலைவர்!”

முனைவர் இரா. கருணாநிதி, பேராசிரியர்

புதுக்கோட்டை நகரம்தான் நான் பிறந்து வளர்ந்த ஊர். அங்குள்ள உசிலங்குளத்தில் வசித்தோம். எனது அப்பா தேநீர்க் கடை வைத்திருந்தவர். கழகத்தின், முத்தமிழறிஞரின் தீவிர தொண்டர். கடையில் காலண்டர் படங்களில் புன்னகைக்கும் கலைஞரை என் சிறுவயதிலிருந்தே அறிவேன். எனக்கும், என்னோடு பிறந்தவர்களுக்கும் இரவுநேரப் பாடசாலைபோல பேரறிஞர் அண்ணாவை, முத்தமிழறிஞர் கலைஞரை அறிமுகப்படுத்துவார். அப்போதே அவர் ஒன்பதாம் வகுப்பு படித்தவர் என்பதால், கலைஞரின் கவிதைகள், வசனங்களை மனப்பாடமாகச் சொல்வார். பிறக்கும்போது எனக்கு வைக்கப்பட்ட ‘கண்ணன்’ என்கிற பெயரை, பள்ளியில் சேர்க்கும்போது ‘கருணாநிதி’ என மாற்றி விட்டார். அதன்மூலமாக கலைஞரை இன்னும் எனக்கு நெருக்கமாக்கினார்.

அதேபோல, நான் படித்தது பேரறிஞர் அண்ணா நினைவு தொடக்கப்பள்ளி. பள்ளிக்கு அருகிலேயே கழகத்தின் முக்கியப் பிரமுகர் ஷேக் தாவூது அவர்களின் வீடு. அவர் மகன் ஜின்னா என்னைப் போன்ற சிறுவர்களை எல்லாம் வைத்து, அரசியல் வகுப்பு எடுப்பார். சின்ன சைக்கிள் வாங்கிக் கொடுத்து, கழகக் கொடி கட்டி சைக்கிள் பேரணி விடுவார். இப்படியாக கழகமும், கலைஞரும் எனக்கு அறிமுகமாகினர். ‘டாக்டர் கலைஞர் வாழ்க’ என முழக்கமிட்ட, என் சிறு வயதில் தொடங்கிய அந்த உறவு இன்று வரை மாற்றமில்லாமல் இருக்கிறது.

அதன்பின்னர் பள்ளி, கல்லூரிகளில் இலக்கிய மன்றச் செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதுடன், கழக மேடைகளிலும் பங்கெடுத்தேன். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்போதே புலவர் பொன்னி வளவன், தஞ்சை கூத்தரசன், குடியரசு, கவிதைப்பித்தன் ஆகிய கழகக் கவிஞர்களுடன் கவியரங்க மேடைகளில் பங்கெடுத்துள்ளேன். அப்போதே மாநில அளவிலான ஒரு போட்டியில், **‘கருஞ்சட்டைப் பெரியாரும் டாக்டர் கலைஞரும்’** எனக் கட்டுரை எழுதி முதல் பரிசினை, ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறேன். அப்படியான நாட்களில் முதன்முறையாக கலைஞரை நேரில் பார்க்கும் வாய்ப்பு, நான் இளங்கலை படிக்கும்போது அமைந்தது. அதற்கு முன்பு, கழக மேடைகளில் பார்த்திருந்தாலும், அவரோடு பேசும் வாய்ப்பு எனக்குப் பெருமகிழ்ச்சியளித்தது.

### பேச்சும் வீச்சும்

1990-ஆம் ஆண்டு கீழக்கரையில் **உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு** நடைபெற்றது. அந்த மாநாட்டுக்காக கவிக்கோ அப்துல்ரகுமான் தலைமையிலான கவிதைப் போட்டியில் வென்று, சிறப்பு அழைப்பாளராக வந்திருந்த முதலமைச்சர் கலைஞர் கரங்களால் முதல் பரிசு பெற்றேன். ‘என்ன படிக்கிறே?’ எனக் கேட்டவர், ‘மிக அருமையான பேச்சு, மிக அருமையான வீச்சு’ எனப் பாராட்டினார். அதன்பின்னர், மாநில அளவிலான போட்டிகளில் பரிசு வாங்கினால், மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அவர்களிடம் கடிதம் வாங்கிக் கொண்டு, சென்னை வந்து, அவரைச் சந்தித்து வாழ்த்து வாங்குவேன். ‘என்ன பேருய்யா’ என்பார், ‘அய்யா உங்க பேருதாங்க’ என்பேன்.

அடிக்கடி அறிவாலயம் வருவதைப் பார்த்த அய்யா தமிழ்க்குடிமகன் அவர்கள் , ‘என்னய்யா சும்மா, சும்மா வந்துகிட்டு இருக்க, அடிக்கடி வராதய்யா’ என்பார். ஆனாலும், நான் தலைவரைப் பார்த்துவிட்டு வருவதை, எனது தந்தையார் தனக்குக் கிடைத்த வெகுமதிபோல கொண்டாடுவார். ஒருமுறை ‘தங்கப்பேனா’ பரிசு வாங்கி இருந்தேன். அப்போதும் வந்திருந்தேன். அப்படி அடிக்கடி தலைவரைப் பார்க்க வந்த வகையில், தமிழ்க்குடிமகன் அவர்களுடன் நன்கு பரிச்சயம் ஏற்பட்டது.



### உதவியாளராக

நான் படித்து முடித்து வேலை தேடிக் கொண்டிருந்தபோது, காரைக்குடிக்கு நிகழ்ச்சிக்காக வந்திருந்த தமிழ்க்குடிமகனைச் சந்தித்து வேலைகேட்டு கோரிக்கை வைத்தேன். அவர், தனது நேர்முக உதவியாளராக அமர்த்திக் கொண்டார். அப்போது அவர் தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சராக இருந்தார். அதில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சி என்னவென்றால், தினந்தோறும் கலைஞரைப் பார்க்கிற வாய்ப்பு கிடைத்ததுதான். அதன் மூலம் அவரது பேச்சை, நடையை, எழுத்தை, பார்வையை அருகிருந்து காணும் வாய்ப்பைப் பெற்றது என் வாழ்நாள் பேறு.

கவிக்கோ அப்துல்ரகுமான், மு.மேத்தா, கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோருடன் பல கவியரங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன். நிகழ்ச்சிக்கு கலைஞர் வந்தால் ரசித்துக் கேட்பார். நிகழ்ச்சி முடிந்ததும் அவர் தட்டிக் கொடுப்பது, கோடி விருதுகளுக்குச் சமமானது. அப்படிப் பலமுறை தட்டிக் கொடுத்துள்ளார். நான் வாசித்த கவிதையை கலைஞர் சிலாகித்துச் சொன்னதாக கவிப்பேரரசு அவர்கள் சொன்னார். அவர் மூலமாக, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை கலைஞர் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் வாய்ப்பு வந்தது. எனக்குக் கிடைத்த வாய்ப்பில், கலைஞர் குறித்த கவிதை ‘பஞ்ச்’ களால் இடைவிடாத கரவொலி. அரங்கமே ஆர்ப்பரித்தது. அன்று அதைக்கேட்டு, அவர் அவ்வப்போது புன்னகை செய்ததுதான் என் வாழ்நாள் சாதனையாக நினைக்கிறேன்.

### அரசுப் பணி கவனம்

செம்மொழி மாநாட்டுக் கவியரங்கிலும் என் கவிதையைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். அவ்வப்போது கழகத்தின் புகழ்பாடும் பாடல்களை எழுதி, எடுத்துச் செல்வேன். அவற்றைப் பார்த்து, நன்றாக உள்ளது என கருத்து சொல்வார்.

கலைஞர் கடைசியாக ரசித்த கவியரங்க நிகழ்வு திருவாரூரில் நடைபெற்றது. அப்போது அ.தி.மு.க. ஆட்சிக் காலம். கவிதைப்பித்தன் அவர்கள் ஏற்பாடு செய்த அந்த நிகழ்வில், நான், கவிஞர்கள் விவேகா, பா.விஜய் உள்பட பலர் கலந்து கொண்டோம். கவியரங்கம் முடிந்து அவரைப் பார்த்தபோது, “உங்களை வாழ்த்திப் பாடக் கிடைத்த வாய்ப்புக்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும்” என்றேன். “அப்படிச் சொல்லக்கூடாது, உங்கள் கவித்திறன் அபாரம், ரசித்தேன்” என்றார்.

நான் அரசுக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறேன் என்பதை அவர் அறிவார். “அரசுக் கல்லூரியில இருந்துகிட்டு கட்சி நிகழ்ச்சிக்கு வராதய்யா, வேலையை விட்டு எடுத்துடப் போறாங்க” எனக் கூறினார். அந்த இடத்திலும், அவர் புகழ் பாடினாலும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது குறித்து, அவர் காட்டிய அக்கறை எனக்கு தாய்ச்சொல் போல இருந்தது.

**அந்தக் கண்ணீர்தான் சொற்களாக வெளிவந்ததோ என்னவோ… அந்தச் சொற்களும் கண்ணீரும் காலமெல்லாம் கலைஞரை போற்றிக் கொண்டிருக்கும்.**

அவர் மறைவின்போது, இறுதி ஊர்வலத்தை வர்ணனை செய்ய, சென்னை வானொலி நிலையத்தில் இருந்து அழைத்திருந்தனர். மாநிலக் கல்லூரியின் இந்நாள் முதல்வர் இராமன் அவர்கள் என்னைப் பரிந்துரை செய்திருந்தார். அன்று கலைஞர் குறித்து வர்ணனை செய்கையிலேயே என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அந்தக் கண்ணீர்தான் சொற்களாக வெளிவந்ததோ என்னவோ… அந்தச் சொற்களும் கண்ணீரும் காலமெல்லாம் கலைஞரைப் போற்றிக் கொண்டிருக்கும்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## உயர்கல்வியைச் சீர்குலைக்கும் பா.ஜ.க.!

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் அகில இந்திய சராசரியே 28.4%-தான். ஆனால், எந்த பெரிய மாநிலமும் எட்ட முடியாத அளவுக்கு 50%-ஐ நெருங்கியிருக்கிறது தமிழ்நாடு. கல்வி உரிமைகளுக்காக, நூறாண்டாக திராவிட இயக்கம் மேற்கொண்டு வரும் இடைவிடாத போராட்டமும், 2006-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புக்கான நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டதும், இதற்கு மிக முக்கியக் காரணங்கள். ‘நீட்’ திணிக்கப்பட்ட பிறகும்கூட உயர்கல்வி மாணவர் சேர்க்கையில், தமிழ்நாடு சூட்டியிருக்கிற மகுடத்தை, எவராலும் அகற்ற முடியாததற்கு மற்றுமொரு காரணம், கல்லூரி படிக்கச் செல்லும் அரசுப்பள்ளி மாணவ- மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் ‘புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன்’ திட்டங்கள்.

இவ்வாறாக, உயர்கல்விக்கு மாணவர்களை உந்தித் தள்ளும் உன்னதத் திட்டங்களை ‘திராவிட மாடல் அரசு’ சிந்தித்துச் செயல்படுத்தினால், அதற்கு நேரெதிராக உயர்கல்வியில் இருந்து ஏழை எளியோரை விலக்கிவைக்கும் விபரீத வேலைகளைத் துணிந்து செய்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) வெளியிட்டுள்ள வரைவறிக்கையில், “உயர்கல்வி மாணவர் சேர்க்கையை, இனி ஆண்டுக்கு இருமுறை நடத்தலாம். இடையில் வேறு பாடங்கள் பிடித்திருந்தால் மாற்றிக்கொள்ளலாம். ஒரே நேரத்தில் 2 இளநிலை, முதுகலைப் படிப்பைத் தொடரலாம். பன்னிரண்டாம் வகுப்பில் படித்த பாடப்பிரிவுக்குப் பதிலாக, கல்லூரியில் எதை வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம். அதற்கு பல்கலைக்கழக அளவில் அல்லது தேசிய அளவில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் மாணவர்கள் தேர்ச்சி அடைய வேண்டும்.

இளநிலை அல்லது முதுகலை பட்டப்படிப்பில் முதல் ஆண்டில்தான் சேர வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. 2-வது, 3-வது அல்லது இறுதி ஆண்டில்கூட சேரலாம். விரும்பினால், படிப்பை ஓராண்டுக்கு முன்பே முடித்துக்கொள்ளலாம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு படிப்பை எவரும் முழுமையாக முடிக்க முடியாத அளவுக்கு, இடியாப்பச் சிக்கலாக இருக்கிறது இத்திருத்தங்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், உயர்கல்வியில் இருந்து உழைக்கும் மக்களை வெளியேற்றும் ஆரியச் சூழ்ச்சி, வரைவறிக்கையாக வெளியாகியுள்ளது.

## :ப்ளாஷ்பேக்



கோ.கருணாகரன்



**ஊக்கமுடன் செயல்பட வாழ்த்திய தளபதி!**

1996-ஆம் ஆண்டு இளைஞர் அணிச் செயலாளர்- இன்றைய முதலமைச்சர்-கழகத் தலைவர் அவர்கள், தர்மபுரி மாவட்டத்திற்குத் தேர்தல் பொதுக்கூட்ட நிகழ்வில் பங்கேற்க வருகை தந்திருந்தார். ராஜகோபால் பூங்கா அருகில் நடைபெற்ற கூட்டத்தில், தளபதி அவர்களிடம், முடி திருத்தும் தொழில் செய்து, எனது ஆறு நாள் சம்பளத்தைத் தேர்தல் நிதியாக வழங்கினேன். என்னை வெகுவாகப் பாராட்டிய தளபதி, கழகப் பணிகளில் ஊக்கத்துடன் பணியாற்றுமாறு கூறினார். அப்போது எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் என்றென்றும் நீங்கா நினைவுகளைத் தேக்கி வைத்துள்ளது.

**- கோ.கருணாகரன், கிளைக் கழகச் செயலாளர், இண்டூர் - சோம்பட்டி, தர்மபுரி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அலற வைத்த ‘கம்பரசம்’!

30.06.1943 முதல் 12.09.1943 வரை ‘திராவிட நாடு’ இதழில், கம்பரசம் டோஸ் 1, 2, 3 என 12 கட்டுரைகள் எழுதினார், பேரறிஞர் அண்ணா. கம்பராமாயணத்தை விமர்சனம் செய்து எழுதப்பட்ட தொடர் கட்டுரைகள் இவை. இதற்கு முன்பு சர்ச்சைகளைக் கிளப்பிய ‘ரோமாபுரி ராணி’களை விட ‘கம்பரசம்’ மிகப்பெரிய விவாதங்களைக் கிளப்பியது. இன எதிரிகளை அலற வைத்தது. பின்னர், இக்கட்டுரைகள் நூலாகவும் வெளிவந்தன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

683

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131